ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2113/63 - 2019 මාර්තු මස 08 වැනි සිකුරාදා - 2019.03.08
*2113/63 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 15/2014* (II)

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டம்**

2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 58 ஆம் பிரிவின்கீழ் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

சஜித் பிரேமதாச,
வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும்
கலாசார அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு.
2019, மாச்சு 06.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2019 ஆம் ஆண்டின் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி (தீர்ப்பாளர்களைப் பதிவுசெய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆளொருவர் (இதனகத்துப்பின்னர் ''அதிகாரசபை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் தீர்ப்பாளரொருவராகப் பதிவுசெய்யப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய ஆள் நிர்மாண வேலைகள் பற்றிய ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பானவொரு பிணக்குக்கான தீர்ப்பாளரொருவராக இருத்தலாகாது.


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3. (1) இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் தீர்ப்பாளரொருவராக இருப்பதற்கு விரும்புகின்ற ஆளொவ்வொருவரும், அதிகார சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒரு படிவத்தில், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான மீளளிக்கப்படத்தக்கதல்லாதவொரு செய்முறைப்படுத்தற் கட்டணத்துடன்சேர்த்து அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) உப ஒழுங்குவிதி (1) இன்கீழான ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் :

(அ) பொறியியலில், கட்டிடக்கலையில் அல்லது கணிய அளவியலில் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவொரு பல்கலைக்கழகத்திலிருந்தான இளமாணிப் பட்டம் ஒன்று;

(ஆ) கல்விசார் தகைமையொன்றினூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவகத்தின் அல்லது இலங்கைக் கட்டிடக்கலைஞர்கள் நிறுவகத்தின் அல்லது இலங்கைக் கணிய அளவியலாளர்கள் நிறுவகத்தின் கூட்டிணைப்பு உறுப்பாண்மை ஒன்று; அத்துடன்

(இ) கூட்டிணைப்பு உறுப்பாண்மையைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஆகக்குறைந்தது பத்தாண்டுகளையேனும் கொண்ட இயைபான அனுபவம்.

(3) இந்த ஒழுங்குவிதியின்கீழான விண்ணப்பமொன்று, அறிவையும் தேர்ச்சிகளையும் எடுத்துக்காட்டுகின்றதும் இரண்டா யிரத்துக்குக் குறையாத சொற்களைக் கொண்டதுமான அறிக்கையொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, அவசியமானவிடத்து, மேலதிகத் தகவல்களைக் கொடுத்துதவும்படி விண்ணப்பக்கார ரொருவரைத் தேவைப்படுத்தலாம்.

4. (1) மூன்றாம் ஒழுங்குவிதியின்கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, விண்ணப்பத்தையும் ஆவணங்களையும் விதப்புரைக்காக அதிகாரசபையினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(2) குழுவின் விதப்புரை பெறப்பட்டதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, ஒன்றில் அத்தகைய ஆளைத் தீர்ப்பாளரொருவராகப் பதிவுசெய்து இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான பதிவுக்கட்டணக் கொடுப்பனவின்மேல் பதிவுச்சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும் அல்லது அவரினால் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக அத்தகைய ஆளைத் தீர்ப்பாளரொருவராகப் பதிவுசெய்வதற்கு மறுத்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி தமது முடிபை விண்ணப்பக்காரருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆளைத் தீர்ப்பாளரொருவராகப் பதிவுசெய்வதற்கு மறுக்கின்ற விடயத்தில், அதற்கான அவரது காரணங்களை அவர் குறிப்பிடுதலும் வேண்டும்.

5. ஒவ்வொரு பதிவுச்சான்றிதழும் அதிகார சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான ஒரு படிவத்தில் இருத்தல் வேண்டு மென்பதுடன் அத்தகைய பதிவுச்சான்றிதழானது முன்னரே இல்லாதொழிக்கப்பட்டாலொழிய, அதன்கண் குறித்துரைக்கப்படவொரு காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாதலும் வேண்டும்; அத்துடன் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அது அமைந்ததாதலும் வேண்டும்.

6. எவரேனும் தீர்ப்பாளர் 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை அல்லது விதிகளை அல்லது பதிவுச்சான்றிதழின் நியதிகளுள் மற்றும் நிபந்தனைகளுள் எவற்றையும் மீறியுள்ளாரெனப் பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப்படின் அவர், 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழொன்றை இல்லாதொழிக்கலாம்.

7. (1) நான்காம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழொன்று, அப்பதிவுச்சான்றிதழ் முடிவுறுவதற்கு முன்னர் முப்பது நாட்களுக்குக் குறையாமல், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான புதுப்பித்தற் கட்டணத்துடன் சேர்த்து பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அதற்கென விண்ணப்பம் செய்யப்படுவதன்மீது புதுப்பிக்கப்படற் பாலதாதலும் வேண்டும்.

(2) தீர்ப்பாளர் 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அல்லது விதிகளுக்கு அல்லது பதிவுச்சான்றிதழின் நியதிகளுள் அல்லது நிபந்தனைகளுள் எவற்றுக்கும் இணங்கியொழுகியுள்ளாரெனப் பதிவாளர் தலைமையதிபதி திருப்திப்பட்டால் மட்டுமே பதிவுச்சான்றிதழொன்று அவரினால் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.

8. பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிவினால் இன்னலுறும் ஆளொவ்வொருவரும் 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டுச்சபைக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

9\. (1) அதிகாரசபையுடன் ஏலவே பதிவுசெய்துள்ளவரும் இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்குவரும் தேதியன்று பணியாற்றுகின்றவருமான எவரேனும் தீர்ப்பாளர், இவ்வொழுங்குவிதிகளின் 2 ஆம் ஒழுங்குவிதியில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பதிவுச்சான்றிதழில் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்குத் தீர்ப்பாளரொருவராகத் தொடர்ந்து பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(2) முதலாம் உபஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட தீர்ப்பாளர்கள், பதிவுச்சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதி முடிவுறுமுன்னர்.

முப்பது நாட்களுக்குக் குறையாமல் ஒழுங்குவிதி 7(1) இன் நியதிகளின்படி புதுப்பித்தலுக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி 3(2) இன் ஏற்பாடுகள், (1) ஆம் உபஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட தீர்ப்பாளர்களுக்கு ஏற்புடையவை யாதலாகாது.

**அட்டவணை**

செய்முறைப்படுத்தற் கட்டணம், பதிவுக்கட்டணம் மற்றும் புதுப்பித்தற் கட்டணம்.

(ஒழுங்குவிதிகள் 3(1) 4(2) மற்றும் 7(1))

| விவரணம் | வரிநீங்கலாகக் கட்டணம் (ரூபா) |
|---|---|
| செய்முறைப்படுத்தற் கட்டணம் | ரூபா 3,000.00 |
| பதிவுக்கட்டணம் | ரூபா 20,000.00 |
| புதுப்பித்தற் கட்டணம் | ரூபா 20,000.00 |

3 - 1068/1

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.